254

90

M. Palani

M. Palani




யர் மன்ற
(42 ... தெரு
... வேல் ...
திருவல்லிக்கேணி
தேதி......


# கருணாநிதி கருத்துரைகள்

# கருணாநிதி கருத்துரைகள்

அன்பளிப்பு.
M. [illegible] திருவல்லிக்கேணி
17/8/52

பொது நல ஊழியர் மன்றம்
(42-வது வட்டம்)
தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5.

தொகுத்தவர் :

**அன்புப்பழம் நீ**

பொதுநல ஊழியர் மன்றம்
(42-வது வட்டம்)
தங்கவேல் வைத்தியர் தெருவு
திருவல்லிக்கேணி
தேதி............................195

**முரசொலி பதிப்பகம்**

S. S. B. Press, Madras.

1, பிராட்வே — சென்னை-1.

பதிப்புரிமை

இரண்டாம் பதிப்பு 2-51

விலை அணா 3

---

S. S. B. Press, Madras.

# எங்கள் எண்ணம்

வீரமிக்கச் சொல்லாரம், சிந்தனையைத் தட்டி எழுப்பும் எழுத்தாரம், நாட்டிற்கு நற்பணியாற்றி, மக்கள் உள்ளத்தில் மறக்க முடியாத சின்னமாகத் திகழ்பவர்களில் நண்பர் மு. கருணாநிதி ஒருவர் என்பது நாடு அறிந்ததே! அவரது, நாட்டுக்குப் பயன் தரும் கருத்துரைகளைத் திரட்டி "கருணாநிதி கருத்துரைகள்" என்ற பெயரைச் சூட்டி முதல் வெளியீடாக தமிழகத்திற்கு அளிக்கிறோம்; வெற்றிமாலை பெறும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருப்பதால்!

இந்நூல் வெளிவர பலவிதத்திலும், துணை புரிந்த என் மதிப்புக்குரிய மறக்கமுடியாத நண்பர் மு. நமச்சிவாயம் அவர்கட்கு என் உளங்கனிந்த நன்றி. வணக்கம்.

நா. கிருட்டிணன்,
உரிமையாளர்,
முரசொலி பதிப்பகம்.

## புதிய வெளியீடுகள்

### அழகு ராணி

க. அன்பழகன், எம். ஏ. ... 1 4 0

[அழகிய மூவர்ண அட்டை]

### சிவாஜி பார்ப்பனஞ?

[கலைச் செல்வன்] ... 0 3 0

### குருடன் வாழ்வு

ஆசிரியர் "இராவணன்" தீட்டிய அரிய ஓவியம் அழகிய இரண்டு கலர் மேலட்டையுடன் கூடியது. [அச்சில்]

★

விபரங்கட்கு:

**முரசொலி பதிப்பகம்**

1, பிராட்வே — சென்னை-1

# ★ கருணாநிதி கருத்துரைகள் ★

## இதய ஒலி

வள்ளுவனிடத்தில் விளையாடிய தமிழ், ஒளவையி னிடத்தில் ஆத்திசூடியாய் சிரித்த தமிழ்—பாரதி நெஞ் சில் நர்த்தனமாடி பாரதிதாசனின் இதயக் குமுறலால் கிளம்பிய தமிழ், பாராண்ட தமிழ், இளமைக்குப் பால் வார்த்த தமிழ், புலவர்க்கு வேலான தமிழ் எங்கள் மூச்சு, தமிழ் எங்கள் பண்பு, தமிழ் எங்கள் இதய ஒலி.

## தமிழரசர்கள்

படித்துப்பாரும வரலாற்றை! கனகவிசயர் தலை யிலே கல் ஏற்றி கழுத்தையொடித்த சேரன் செங்குட் டுவன் வீரமிக்கத் தமிழரசன், பர்மாவிலே படையெ டுத்தவர்—இமயத்திலே இரு கொடி செதுக்கியவர் யார்? இவர்கள் இந்நாட்டுத் தமிழர்கள்.

## மன்னர் மாட்சி

மேல் நாட்டுடன் வாணிபம் செய்து வேல்கொண்டு வாழ்ந்த பண்டமிழர் மரக்கலம், மயில், மிளகு இன் னோரன்ன தமிழ்ச் சொற்களை பல்வேறு நாட்டுக்கும் பரி

மாறியது விரிந்து நின்ற—தமிழகம் அவ்வளவு ஏன்? இந்த நாட்டில் இடிந்து காணும் கோட்டை கொத்தளங்கள், மடிந்துபோன மன்னனின் மாட்சியை விளக்குவன.

## இளமைக்குப் பால் வார்த்த தமிழ்

தங்கையும் தன் காதலனும் களத்திலே மடிந்த செய்திகேட்டு இளங்குமரனை இழுத்துவந்து 'போர் முனைக்குப் போடா மகனே என்று வீரப்பாலூட்டினள் தாயொருத்தி......அவள் போதித்தது எந்த மொழியில்? இளமைக்குப் பால் வார்த்த தமிழ் மொழியில் அன்றோ?

## பெருமிதங் கொள்ளுகிறோம்

ஓடிவந்த இந்திப் பெண்ணே! உன்னிடத்தில் கடையெழு வள்ளல்கள் இல்லையடி கள்ளி! குறள் இல்லையடி! அதோ பாரடி கயல், வில். புலிக்கொடி மூன்றினுல் கடல் கடந்தவளடி எங்கள் தாய்! என நாம் பெருமிதங்கொள்ளுகிறோம்.

## சரண்புகமாட்டோம்

இயேசுக்குச் சிலுவையும், முகம்மது நபிக்கு கல்லடியும், சாக்ரடீசுக்கு நஞ்சும், காந்தியாருக்குத் துப்பாக்கிக் குண்டுகளும் பரிசாகத் தரப்பட்ட பயங்கர வரலாறுகளைப் படித்துப்பார்த்துதான் நாங்கள் அறப்போர் தொடுத்திருக்கிறோம்.

மார்பிலே வேல் தாங்கி மரணத்தை அணைப்போமேதவிர மாற்றாரிடம் சரண்புகமாட்டோம்.

7

## நமது இயக்கம்

கல்லடியும் சொல்லடியும் பட்ட காலத்திலே கறையாத இயக்கம்! பணக்காரர்களின் செல்வாக்கென்ற ஈட்டிகள் எறியப்பட்ட நேரத்திலே இறந்துபோகாத இயக்கம் மடாதிபதிகளின் எதிர்ப்பு, மகந்துகள், சீயர்களின் கொதிப்பு இவைகளால் மாண்டுபோகாத இயக்கம் — பதவியும் பட்டமுமே தேவையென்பவர்களின் பாசக் கயிற்றிலிருந்து பாடுபட்ட இயக்கம், சொந்த வாழ்வும சுயநலமுமே பெரிதென்போரின் "பேய்"ப் பிடியிலிருந் தப்பிய இயக்கம், 'ஆறிலும் சாவுதான் நூறிலும் சாவுதான் ஆனது ஆகட்டும் என்று பாடிவரும் ஆயிரமாயிரம் பட்டாளத் தம்பிகளைப் பெற்றுள்ள இயக்கம், ஆரியம் ஒரு மாயை அது பல உருவில் நடமாடும் என்பது கண்டு இலக்கியத் துறையிலே— ஆரியத்தின் கைவரிசையை எதிர்ககப் பலப்பல அணு குண்டுகளை நடமாடவிட்டிருக்கும் இயக்கம்.

இத்துணை மகத்தான இயக்கம் நிலவுபோல் வளர்வதும, தேய்வதும்' பின் வளர்வதுமாயுள்ளது. ஆனால் நம்முடைய ஆசையெல்லாம் இயக்கம் அழியாமலிருந்து அதோடு வளர்வதும் தேய்வதுமின்றி எப்போதும் வளர்வதாகவே இருக்கவேண்டும்.
தான்.

## ஏன் ?

வீரத்தின் உலைக்களமாய்...வெற்றியின் நிலைக்களமாய் வாழ்ந்த வண்டமிழ் நாடே! நீ சூழ்ச்சியின் மறைவிடமாய் ஆனது ஏன் ?

வளமார் திராவிடத்தின் வீரமாகவே நீ வீழ்ந்தது ஏன் ? கடல் வாணிபம நடத்திய கன்னல் ,மொழித் தமிழா ! உன் உடலில் துணியுமின்றி ஊரிலே திரிவது ஏன் ? கடாரம் கொண்ட தமிழா ! நீ வீணரின் விடாப் பிடியில் அகப்பட்டது ஏன் ? மாடமாளிகையிலே உலா விய தமிழா ! நீ மரத்தடியிலே உறங்குவது ஏன் ?

கண்டிருக்கிறோம்

எத்தனையோ பெரும் பெரும் வீரர்களைக் கொலைக் களம் உருவாகக்கொண்டுள்ளது. உலகம் உருண்டை என்று கூறிய கலீலியோ மரணத்தின் உச்சியிலே மடிந்தார். சாக்ரடீசுக்கு நச்சுக்கோப்பை — இயேசுநாதருக்கு இரத்தம் பிழியும் சிலுவை, உலக உத்தமர் காந்திக்கு மூன்று துப்பாக்கிக் குண்டுகள் இதையெல்லாம் கண்டிருக்கிறோம் உலக வரலாற்றில்.

தூக்குமேடை

தூக்குமேடை எத்தனையோ மனிதர்களைத் தனக்கு உணவாக்கிக்கொண்டு உல்லாசம் பாடியபடிதான் இருக்கிறது, அதன் கோரப் பற்களுக்கிடையே சிக்கிச் சீரழிந்த மனித உருவங்கள் கணக்கிலடங்கா, குற்றவாளிகளின் குரல் வளையை நெறிப்பது மட்டுமல்ல; நிரபராதிகளின் வாழ்வை அரை நொடியில் தீர்த்துக்கட்டி, தன் வயிற்றைப் புடைக்கவைத்துக் கொண்டிருக்கிறது தூக்குமேடை, தூக்குமேடையில் உறைந்திருக்கும் ரத்தத்தில் எத்தனை உத்தமர்களின் வரலாறு எழுதப்பட்டிருக்கிறது.

உயர்வை.



## இயற்கை

கண்ணை இமைகள் காப்பாது இயற்கை, இமை யில் பாயும் ஈட்டி கண்ணிலே பாய்வதும் இயற்கை.

## காதலன் கைவிட்டான்...?

காதல் காந்தம் என்கிறார்கள். உள்ளங்களை ஒன் ருக இணைக்கும் கயிறு என்கிறார்கள்; எல்லாம் பொய்யா?

எல்லாம் உண்மை ஆனால் காதலன் காதலியைக் கைவிட்டுவிட்டால் அவளுக்கு இதெல்லாம் பொய்யாகி விடும்.

## நம்பிக்கை

சிந்தனையில்லாதவர்கள் எதையும் நம்புவார்கள் எதையும் சொல்வார்கள் நம்பிக்கை என்பது ஒருவித வியாதி மனித சமுதாயத்தின் மாருத தொத்து நோய்

## அடிகோலுங்கள்

பேதமற்ற பெருவாழ்வு சீமான் என்ற நிலை ஒழிந்த சிங்கார வாழ்வு, சமத்துவ வாழ்வு, சமாதான வாழ்வு இதற்காக அடிகோலுங்கள்,

## இனமுழக்கம்

எல்லோரும் வாழவேண்டும ஒன்றேபோல் ஓர்குல மாய் உழைத்துக் கஷ்டப்பட்டு' பிறரைச் சுரண்டாது; பிறர் உழைப்பைப் பறிக்காது பிறர் உழைப்பை உறிஞ்சாது வாழவேண்டுமென்பதுதான் இன முழக் கம்.

## அறிவியக்கம் ஆசைபடுகுறது

பூ மலர்வதும் கருகி மடிவதும், 'காயமே இது பொய்யடா' எனக் கழறுபவர் பயன்படுத்திக்கொள்ளும் உதாரணங்க்ள். ஆனுல், மலர்ந்த பூ மணம் வீசுகிறதே — அதைத்தான் அறிவியக்கம் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறது.

## அஞ்சும் இனத்தவன்

நீக்கள் சாகப்படும் சமுதாயமா ? சமருக்கு அஞ்சும் இனத்வரா ?...ரத்தக்கடல் உங்கள் மூதாதையரின் நீச்சல்குளம் வேலும் வாளும் அவர்கள் விளையாட்டுக் கருவிகள், போர்க்களம் அவர்கள் தவழும் தாழ்வாரம் பாசறை அவர்கள் படுத்திருந்த தொட்டில்! அவ்வழி வந்தோரே!

தமிழுக்காக தாளமுத்துவையும். நடராசனேயும் தத்தம் செய்தவரே! சமருக்கு அஞ்சாதீர் நீங்கள் ஆளப் பிறந்திருக்கிறீர்.

## நல்ல தீர்ப்பா இது?

மளிகைக்கடையில் சாமான் வாங்கும் சாதாரணப் பேர்வழி கொஞ்சம் உளுந்தை எடுத்துத்தன் கூடையில் போட்டுக்கொண்டால் அது திருட்டு. கடைக்காரன் முக்கால் மணங்கை முழு மணங்காக அளந்தால் அது வியாபார தந்திரம்.

சாதாரண மனிதன் பொய் சொன்னுல் அது பஞ்சமா பாதகம். வக்கீல் சொன்னுல் திறமை! குடிசையில் வாழும் குப்பன் குடித்துவிட்டு ஆடினுல் அவனுக்

குக் குடிகாரப்பட்டம். அதே காரியத்தைப் பெரிய மனிதர்கள் என்று பேசப்படுவோர் செய்தால் அது எஞ்சாய்மெண்ட்.

ஏழைகள்!

காட்டில் திரியும் மிருகங்களுக்குக்கூட சந்தோஷமுண்டே! ஜோடிப் புருக்கள்—ஓடி விளையாடும் மான்கள், பாடிப் பறக்கும் குயில்கள்—அவைகளை விடவா ஏழைகள் குறைந்துவிட்டார்கள்?

யாரால் முடியும்

வாழ்நாளின் வனப்புமிக்க ஒரு பகுதி வீணே கழிவதென்றால்? கொஞ்சு மொழியும் கோலாகாலமும் அனுபவிக்கவேண்டிய பருவத்தில் ஊமையாக முடங்கிக் கிடப்பதென்றால்...? காதல் கீதத்திற்கேற்ற இன்ப கேளிக்கை இளமை நாட்கள், நொண்டியாகி விடுவதென்றால்? எந்தப் பெண்ணால்தான் தாங்கிக் கொள்ள இயலும் அந்த வேதனையை?

ஏ பணமே!

பகல் இரவு என்று பாராது பாடுபட்டுப் பசி, பசி என்று கூறிடாத இரும்பு நெஞ்சினரின் இரும்பு பெட்டியில் தூங்கும் பணமே! குச்சு வீட்டில் ஏழை உணவின்றி ஒய்ந்துகிடக்கவும் மச்சு வீட்டில் பணக்காரர்கள் மதுரகீதம் பாடவும் பாழும் நிலையை உண்டாக்கிய பணமே! உலகத்தின் உயிரே! இன்னும் எத்தனை நாளைக்கு இந்தச் சோம்பேறிகளின் வீட்டில் வாழப் போகிறாய்? வரப்போகிறது பாட்டாளிகளின் படையெடுப்பு! வந்து சேர்.

### காளைகாள் வருக!

எழுச்சியுகங் காணுதற்கு எழுந்து வந்த காளை காள்! வீழ்ச்சியுற்ற திராவிடத்தின் வீரமிக்க குழந்தை காள்!...வருக! ஈட்டியின் முனைகளே தீட்டிய கூர்வாள் களே! நெருப்பின் பொறிகளே! நீங்கள்தான் தேவை.

### திராவிட இளஞ் சிங்கங்களே!

நீங்கள் ஒவ்வொருவரும் வீரராகுங்கள், நாட்டுக் காக...கொள்கைக்காக வாழுங்கள், சிங்கங்களே! நடைப் பிணங்களாகத் திரிபவரை...புலிகளாக்குங்கள் காட்டிக்கொடுப்பவரில்லாத கல் மனத்தினர் இல்லாத தொரு நிலையை காணுங்கள்.

### உண்மைக் காதல்

காதலுக்கும் கடவுளுக்கும் வேறுபாடில்லை, அவை காலத்தால் அழிவதுமில்லை என்ற உண்மை உணர்ந்து அவர்கள் வாழ்வு நடத்தினர். கடலிலே எழும் அலை போன்றது காதல்; அதன் கொந்தளிப்பிலே சிக்கியவர் எவரும் தப்புவது இல்லை! காதல் ஆணையும் பெண்ணை யும் ஒன்ருகிக் காட்டும் ஒரு வசீகரமான வானவில்! பாலும் சர்க்கரையும் சேர்ந்து உண்டான சுவையை எப்படிப் பிரிக்க முடியாதோ அதே போல்தான் காத லையும் நெஞ்சையும் பிரிக்க முடியாது! அதுவும் உண் மைக் காதலாக இருந்தால்தான்.

### கோவில் ஏன்?

சிந்தனை என்ற வயலுக்கு ஆராய்ச்சி என்றநீர் பாய்ச்சும் பகுத்தறிவுப் பரம்படித்து.உயர்வு தாழ்வு

என்ற மேடு பள்ளங்களைச் சமப்படுத்தி மூடமதி என்ற களைகளை முற்றிலும் அகற்ற விவேகம் என்ற விளைவு ஏற்படும். நல்ல எண்ணம் என்பது நமக்குக் கடவுளாக இருக்கையில் கோவில் ஏன்?

உண்மைக் காதல் வஞ்சகமற்றது, எவ்விடத்தும் சமத்துவம் பாராட்டக் கூடியது, உயர்வு தாழ்வு அதனிடம் இல்லை வீரத்திற்கும் தியாகத்திற்கும் காதலே பிறப்பிடம்.

## தமிழகத் தாய்மரர்கள்

தமிழ் நாட்டிலே வாழ்ந்த வீரத்தாய்மார்கள் தங்களுடைய குழந்தைகளைப் போருக்கு அனுப்பிய செய்திகளை நாம் ஒவ்வொருவரும் கேள்விப்பட் டிருக்கிறோம், ஒரு தாய் தன மகன் முதுகில் காயப்பட்டு அவன் இறப்பானே யாகில் தன் மகனுக்குப் பாலூட்டிய மார்பை அறுத்துவிடுவேன் என்று சபதம் கூறிச் சமர்க்களம் சென்று தனது மைந்தன் மார்பிலே குருதி வழியக் கண்டு பெருமகிழ்ச்சி கொண்டாள் என்பது தமிழக வரலாறு. பெற்றோரும் உற்றோரும் காதலரும் போர்க்களத்தில் மாண்டனர் என்ற செய்தியைக் கேட்டு முரசொலி கேட்கும் திக்கிலே எதிரிப் படைகளை எதிர்த்துச் செல்வாய் மகனே என்று அனுப்பியது அன்றைய தமிழகம்; இன்று பயமிகு படுகுழியாகிவிட்டது.

## செய்யுங்கள்!

சமுதாய ஊழலை சாகடியுங்கள்! மூடமதியை முறியடியுங்கள்! வைதீக வெறி பிடித்த நகரைப் பகுத்தறிவு

கோட்ட மாக்குங்கள். பாழ்பட்ட தமிழர் வாழ்வை சீர்படுத்துங்கள்.

## நாஸ்திகர் யார்?

வேதத்தை விட்டு சாஸ்திரத்திற்கு வந்தோம். ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகனந்தர் இவர்கள் கூறியவற்றைம் படித்தோம். விவேகானந்தர் ஏதேதோ கூறினலும், முடிவில் 'விதிவிதி' என்று கூறுகிருர். உடனே, அவர்களை விட்டுவிட்டோம். இராமானுஜர், சங்கராச்சாரியர் ஆகிய இவர்களிடம் வந்தோம். சங்கராச்சாரியார் தனது சல்லாப வாழ்க்கைக்கோ பல்லாக்கு தேவை என்கிருர் விட்டுவிட்டோம். ஆரிய மாயை கண்டோம். அதில் அகப்பட்டு மக்கள் அல்லல் படுவதையும் பார்த்தோம், ஆரியமாயையை அகற்றி பகுத்தறிவு ஒளியைப் பரப்ப முயன்ருேம்; பரப்பி வருகிருேம், நாடு நலம்பெற நாம் உழைக்கிருேம். நம்மை பார்த்து இந்த அரசாங்கம் கிண்டல் செய்கிறது சிறையில் தள்ளுகிறது. சித்திரவதை செய்கிறது. நூல்களை தடை செய்கிறது. நாஸ்திகர் என்று அழைக்கிறது இந்த நன்றிகெட்ட அரசாங்கம். நாஸ்திகர் யார்? நாங்களா நாஸ்திகர்?

## உரிமை இல்லை

இரத்தத்தை வியர்வையாக மாற்றி மகேஸ்வரனை செதுக்குகிருன் சிற்பி, சிற்பி செதுக்கிய மகேஸ்வரனைத் தொட அவனுக்கு உரிமையில்லை. அதே சமயத்தில்

அந்த மகேஸ்வரனுக்கு மாலை அணிவிக்க, அம்மையே, அப்பா என்று அர்ச்சிக்க தொட அதன் மூலம் தன் வயிற்றைக் கழுவிக்கொள்ள வஞ்சகக் கூட்டம் ஒன்றுக்கு உரிமையிருக்கிறது.

### ஆனந்திக்க முடியவில்லை

பூமியில் ஆயிரம் ஆயிரம் அடிகளுக்குமேல் தோண்டி, உள்ளே புகுந்து, உயிரைக் காணிக்கையாக வைத்து வெட்டி எடுக்கிறான் தங்கத்தை, பாட்டாளி அதே தங்கத்தால் மனைவி மகிழ அவள் கழுத்திலே ஒரு தங்கசுச் சங்கிலியை அணிவித்துப் பார்க்க முடியவில்லை. கொஞ்சிப் பேசும் குழந்தையின் கழுத்தில் அந்தத் தங்கத்தால் அணிசெய்து அணிவித்து ஆனந்திக்க முடியவில்லை, அதே நேரத்தில் பாடுபடாத கூட்டம், பசும்பொன்னால் பளபளக்கும் நகைகளை அணிந்து அழகு பார்க்கிறது.

### அழிக்க முடியாது

நாம் வைக்கோல் அல்ல வாள். வைக்கோல்கள் வாளில் மோதுகின்றன, கட்டாயம் அவை வெட்டுண்டுவிழும். நம்மை சிறையில் தள்ளிவிட்டால், அழிந்து விடமாட்டோம். நீதியுடன் நடப்பவர்கள் நாம். நேர்மையுடன் நடப்பவர்கள் நாம் நம்மை அழிக்க முடியாது.

### நினைவுச்சின்னம் உண்டா

இந்நாட்டிலே ஆங்கிலேயர் ஆட்சி அகல திராவிடர்கள் உழைத்திருக்கிறார்கள். அவர்களுக்கு வடநாட்டிலே ஒரு சின்னம்கூட கிடையாது. வடநாட்டில் உள்

ளவர்களுக்கு இங்கு ஏராளமாக நினைவுச் சின்னங்கள் இந்நாட்டிலே உள்ள ஒருவருக்காவது வடநாட்டிலே நினைவுச் சின்னம் உண்டா ?

செத்த மொழி எதற்கு

செந்தமிழ் நாட்டிலே பிறந்த தீரர்கள் கட்டிய கோவிலிலே, ஆண்டவனுக்கு அர்ச்சனை நடப்பது அவனது மொழியல்ல, சமஸ்கிருதத்தால்! சொந்த மொழி இருக்க வந்த மொழியில் ஏன் நடக்கவேண்டும்? செந்தமிழ் இருக்க செத்த மொழி எதற்கு?

சிங்கமெனச் சீறும் செழுந் தமிழா!

வாழ்க தமிழ்! வாழ்க திராவிடம்!



# ஜீவா ஸ்டமக் பவுடர்

ஆப்ரேஷன் தேவையில்லை !

சகலவித வயிற்று வலியையும் வயிற்றிலேற்படும் புண் களையும், வயிற்றை ஆப்ரேஷன் செய்யாமல் குணப்படுத்தும். இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி செய்தது.

இம்மருந்து, அல்சர், அஜீரணம், மலபந்தம், குடலிரைச்சல், புளியேப்பம், வயிற்றுக்குத்தல், குடல் புண், ரணம், சதை வளர்தல், குலைக்கட்டி, ஈரலில் சதைவளர்தல், கைகால் குத்தல், இடுப்பு நோய், மயக்கம், சரீர காங்கை, சாப்பிட்டு முன்னும் பின்னும் உண்டாகும் வயிற்று வலி, வாந்தி, குன்மம், வயிற்றில் உண்டாகும் இன்னும் பலவிதமான வியாதிகளையும் குணப்படுத்தும்.

20 நாள் 40 வேளை மருந்து ரூ. 2—8—0

# காசா (ஆஸ்த்மா நிவாரணி)

காசம், இருமல் முதலிய வியாதிகளுக்குத் தலைச்சிறந்தது. (இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி) வனமூலிகை உலோக வஸ்துக்களைக்கொண்டு செய்தது. இருமல், காசம், இளைப்பு, ஈளை, கபம், குரலடைப்பு, தொண்டைக் கம்மல், தொண்டைவலி, மார்துடிப்பு, வலி முதலிய வியாதிகளைக் குணப்படுத்தும்.

மார்பிலும், தொண்டையிலும், சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலைத்தணியச்செய்து கபத்தை அறவே ஒழித்து, சளியோடு ரத்தம் வருதல் மஞ்சள் நிறமாக வருதல், இளைப்புக் காணுதல், பலஹீனம், உடம்பு மெலிதல், ஆயாசம் மூச்சுத் திணறல், கைகால் அசதி, சுவாச காசம், ஜுரம் முதலியவைகளைக் குணப்படுத்தி, இரத்த சுத்திசெய்யும். உபயோகித்து உண்மை அறியவும். ஆண் பெண் பத்தியமின்றிச் சாப்பிடலாம்.

20 நாள் 40 வேளை மருந்து ரூ. 2—8—0.

## பெங்களூர் டிஸ்பென்ஸரி

தபால் பெட்டி நெம்பர், **1657**

327, தங்கசாலை தெரு — மதராஸ்—1

பேராசிரியர். தி.வ. மெய்கண்டார் அவர்களின்

அன்பளிப்பு